2003 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 32-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,07,76,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

5. அறிவிப்பு

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-4-2003 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS